செய்தி வெளியீடு எண்: 871 நாள்: 28.06.2024

# செய்தி வெளியீடு

**நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு கோரும் கோரிக்கை குறித்து நாடாளுமன்றத்தில் குரல் எழுப்ப வேண்டும் என்று கோரியும், இந்தியா கூட்டணியில் உள்ள மாநிலங்கள் நீட் தேர்வுக்கு எதிராக தமிழ்நாட்டைப் போன்று அந்தந்த மாநில சட்டமன்றங்களில் தீர்மானம் நிறைவேற்றவேண்டும் என்று கோரிக்கை விடுத்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி அவர்களுக்கு இன்று (28 - 6 - 2024) கடிதம்.**

நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு கோரும் கோரிக்கை குறித்து நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பவேண்டும் என்று கோரியும், இந்தியா கூட்டணியில் உள்ள மாநிலங்கள் நீட் தேர்வுக்கு எதிராக தமிழ்நாட்டைப் போன்று அந்தந்த மாநில சட்டமன்றங்களில் தீர்மானம் நிறைவேற்றவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி அவர்களுக்கு இன்று (28 - 6 - 2024) கடிதம் எழுதியுள்ளார்.

மருத்துவப் படிப்புகளில் மாணவர் சேர்க்கைக்கான நீட் தேர்வு முறையை தமிழ்நாடு தொடர்ந்து எதிர்த்து வருவதை தாங்கள் அறிவீர்கள் என்றும், தேசிய தேர்வு முகமை நடத்திய நீட் தேர்வில் ஏற்பட்ட பல்வேறு முறைகேடுகள் குறித்த சமீபத்திய செய்திகள் நாட்டில் மருத்துவப் படிப்புகளில் சேர்வதற்காக கடினமாக உழைக்கும் மாணவர்களின் கனவுகளை சிதைத்துள்ளதாகவும், கிராமப்புற ஏழை எளிய இளைஞர்கள் மருத்துவம் பயிலவேண்டும் என்ற கனவையும் இந்தத் தேர்வுமுறை தடுக்கிறது என்றும் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு அளிக்க வேண்டும் என்று ஒன்றிய அரசை வலியுறுத்தி தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதையும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் நகலை மாண்புமிகு எதிர்கட்சித் தலைவரின் பார்வைக்காக இத்துடன் இணைத்துள்ளதாகத் தெரிவித்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டின் இந்தக் கோரிக்கை குறித்து நாடாளுமன்றத்தில் தாங்கள் குரல் எழுப்பவேண்டும் என்றும், இந்தியா கூட்டணியில் உள்ள மாநிலங்கள், மாணவர்களின் நலன் கருதி, தமிழ்நாட்டைப் போன்று அந்தந்த மாநில சட்டமன்றங்களில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

******

**Text of the D.O.Letter of the Hon'ble Chief Minister of Tamil Nadu Thiru.M.K.Stalin addressed to the Hon'ble Leader of Opposition Thiru.Rahul Gandhi requesting to voice for the demand of Tamil Nadu for exemption of NEET and also requesting INDIA alliance to pass resolution against NEET in their Legislative Assemblies.**

As you are aware, Tamil Nadu has been opposing the NEET system of examination for admission to medical courses.

The recent reports of irregularities in the examination conducted by the NTA has shattered their dreams of many hard-working aspirants of medical courses in the country. This system is also depriving the rural poor youth to fulfil the dreams of becoming a medical graduate.

Therefore, in this regard the Tamil Nadu legislative assembly passed a resolution urging the Union government to exempt Tamil Nadu from the NEET examination.

I am enclosing herewith a copy of the resolution passed by the Tamil Nadu legislative assembly for your kind perusal.

I request you to voice this concern and the demand of Tamil Nadu in the Parliament and also suggest to the states that are in the INDIA alliance to pass similar resolutions in the respective assemblies in the interest of the youth of the nation.

******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu